16.10.2024 அ.வ. எண். 438/2021 வா.சா.1 சேட்டு

1 முதல் 5, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முனுசாமி பிள்ளை என்னுடைய தகப்பனார். கண்ணம்மாள் என்னுடைய தாயார். என் பெற்றோர்களுக்கு 2 மகள்கள், 3 மகன்கள். மகன்களில் 2ம் பிரதிவாதி தான் மூத்தவர். 2வது மாயப்பிள்ளை, 3வது நான். மகள்கள் பெயர் நவனீதம்மாள், அமிர்தம்மாள். நான் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். என்னுடைய 2 சகோதரர்களுக்கு விவசாயம் தான் தொழில். என் சகோதரர்களுக்கு கல்வி அறிவு இல்லை. என் தகப்பனார் 1995 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். என் தாயார் 2012 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். என் சகோதரர் மாயப்பிள்ளை இறந்து சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். என் தகப்பனார் உடன் பிறந்தவர்கள் என் தகப்பனாருடன் சேர்த்து 4 பேர். பூர்வீக சொத்து எவ்வளவு இருந்தது என்றால் நினைவில்லை. மொத்த சொத்துமே என் தகப்பனாரும், தாயாரும் சம்பாதித்த சொத்துக்கள். தாவா சொத்துக்கள் என் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். வழக்கு சொத்துக்கள் என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்கள் ஆகும். என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் கிரயம் வாங்கிய சொத்துக்களை பாகம் கொடுத்து விட்டார் அதனால் வழக்கில் சேர்க்கவில்லை. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக இந்த வழக்கே இல்லை. வழக்குரையில் பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்பட்டுவிட்டது எனவும், என் பெற்றோர்கள் விட்டுச்சென்ற சொத்துக்கள் சம்மந்தமாகவும் பாகம் ஏற்படவில்லை என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா சொத்துக்கள் சம்மந்தமாக இவ்வழக்கே இல்லை. என் அப்பா சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் ஏற்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அப்போது என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தார்கள். என் தகப்பனார் முன்னின்று பாகம் செய்துவைத்தார். என் தகப்பனார் சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் ஏற்பட்டபோது எழுத்து பூர்வமாக ஆவணம் ஏற்படவில்லை. என் தகப்பனாருக்கு நஞ்சை புஞ்சை நிலங்கள் 6-7 ஏக்கர் இருந்திருக்கும். என் தாயார் பெயரில் சுமார் 1 ஏக்கர்

இருந்திருக்கும். என் அப்பா சொத்தில் ச.எண். 377-ல் 1 ஏக்கர் 33 சென்ட் பாகத்தில் வந்தது. மாயப்பிள்ளைக்கு 1 ஏக்கர் 50 சென்ட்டும், கிணறு, பம்புசெட் பாகத்தில் வந்தது. முனியப்பிள்ளைக்கு 1 ஏக்கர் 80 சென்ட்டும், கிணறு, பம்புசெட் பாகத்தில் வந்தது. பாகப்பிரிவினைக்கு பிறகு அவரவர்கள் பெயருக்கு பட்டா மாறிவிட்டது. என் தாயார் பெயரில் இருந்த சொத்துக்களுக்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு மாறிவிட்டது. காலனி ஓரமாக என் தகப்பனாருக்கு 2 ஏக்கர் 60 சென்ட் நிலம் சொந்தமாக இருந்தது. மேற்சொன்ன 2 ஏக்கர் 60 சென்ட் நிலத்தில் 60 சென்ட் நிலத்தை எனக்கு தனிப்பட்ட முறையில் கொடுத்தார்கள். பாக்கி நிலத்தை 3 பேருக்கும் சரிசமமாக பிரிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள். மேற்சொன்ன நிலத்தை ஒட்டியவாறு நத்தத்தில் 40 சென்ட் நிலம் இருக்கிறது. 40 சென்ட் நிலமும் எனக்கு ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். முஸ்லிம் தெரு ஓரம் உள்ள 30 சென்ட் நிலத்தையும், கிணற்றில் 2/3 பாகத்தை எனக்கு ஒதுக்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல, 12 சென்ட் தான் ஒதுக்கினார்கள் பாக்கி நான் கிரயம் வாங்கியதாகும். ச.எண். 377-ல் 1 ஏக்கர் 33 சென்ட் ஒதுக்கினார்கள். என் தகப்பனார் இருந்தபோதே பாகம் ஏற்பட்டு தனித்தனியாக சென்றுவிட்டோம். பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்புவரை ஒன்றாக தான் இருந்தோம். பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்பு என் பெயரிலும், 1ம் பிரதிவாதி பெயரிலும் சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டது என்றால் இல்லை. என் பெயரில் வாங்கிய சொத்தை என் தகப்பனார் எனக்கே பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டார் என்றால் பாகப்பிரிவினைக்கு முன்பு நான் சொத்தே வாங்கவில்லை, பாகப்பிரிவினைக்கு பிறகு தான் சொத்து வாங்கினேன். மாயப்பிள்ளைக்கு நஞ்சையில் 80 சென்ட்டும், புஞ்சையில் 60 சென்ட்டும், கிணறு, பம்புசெட் பாகத்தில் ஒதுக்கப்பட்டது. மாயப்பிள்ளைக்கு பள்ளத்தெருவில் மனை தான் பாகத்தில் ஒதுக்கினார்கள், மெத்தை வீடு அவர் கட்டிக்கொண்டார். காலனிக்கு செல்லும் ரோடை ஒட்டியவாறு இருந்த நிலத்தில் 1ம் பிரதிவாதிக்கு 1 ஏக்கர் 70 சென்ட் நிலமும், கிணறு, பம்புசெட் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் என் தாயார் நிலத்தையும்

சேர்த்து சொல்கிறார். காலிமனை 37 சென்ட்டில் எனக்கு 7 சென்ட்டும், 1ம் பிரதிவாதிக்கு 30 சென்ட்டும் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல சமமாக ஒதுக்கப்பட்டது. மசூதி மானியம் நிலம் 3 ஏக்கர் 27 சென்ட் 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்டது அதற்கான பணத்தை என் தகப்பனார் தான் கட்டினார். மேற்சொன்ன 3 ஏக்கர் 27 சென்ட் நிலத்தை நானும் என் சகோதரர்களும் சமமாக பிரித்துக்கொண்டோம். மசூதி மானிய நிலம் தனித்தனியாக பட்டா ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் யார் பெயரிலும் ஏற்படவில்லை மசூதி மானியம் நிலம் என்று தான் உள்ளது. எனக்கும் என் சகோதரர்களுக்கும் பாகமாக வந்த சொத்துக்கள் என் பெற்றோர்கள் கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றும் எல்லா சொத்துக்களையும் தான் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. காலனி ஓரத்தில் இருந்த 2 ஏக்கர் நிலத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த நிலத்தை எனக்கு கொடுப்பது என்றும் மசூதி மானியம் நிலத்தில் எனக்கு பாகமாக வந்த நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு கொடுப்பது என்றும் முடிவு ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. மசூதி மானியம் நிலத்தில் 1ம் பிரதிவாதிக்கு வந்த நிலத்தை எனக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல அவர் தான் வைத்துள்ளார். மசூதி மானியம் நிலத்தில் 1ம் பிரதிவாதி அவருக்கு உண்டான பாகத்தை எனக்கு கிரயம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கு வீட்டுமனையில் வந்த 7 சென்ட் பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு கொடுப்பதாக உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன்படி பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் என் பெற்றோர்கள் இறந்தபிறகு பட்டா அவர் பெயரில் உள்ளது. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாறி 10 வருடங்கள் இருக்கும். பாகப்பிரிவினைக்கு பிறகு 37 சென்ட்டிற்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 1ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்று சொன்னால் பட்டா மாறியது உண்மை ஆனால் யாருக்கும் கொடுக்கவில்லை. பட்டா மாறுதல் செய்தது சம்மந்தமாக வருவாய் துறையில் சென்று பார்க்கவில்லை. என் தாயார் பெயரில் இருந்து சொத்துக்கள் சம்மந்தமாக பாகம் ஏற்படவில்லை என்று சொல்வது தவறு என்றும் எல்லா சொத்துக்கள் சம்மந்தமாகவும்

பாகம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. பாகம் ஏற்படவில்லை என்று தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவருடைய பிள்ளைகள் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துவிட்டார், பட்டாவை மட்டும் வைத்து எழுதிவிட்டார். பட்டா 1ம் பிரதிவாதியின் பசங்கள் பெயரில் மாறிவிட்டது என்றால் கவனிக்கவில்லை. 37 சென்ட்டில் வீடு உள்ளது என்றால் முள் தோப்பு உள்ளது அதில் பாதியை நானும், பாதியை 1ம் பிரதிவாதியும் வெட்டிவந்தோம். பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என கூறிவிட்டு பாகப்பிரிவினை ஏற்படவில்லை என தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும் வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. 37 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதால் தான் பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு மாறியபோது நான் எந்த ஆட்சேபனையும் செய்யாமல் இருந்தேன் என்று சொன்னால் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவர் பெயருக்கு பட்டா மாறியது. எழுத்துபூர்வமாக பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பதை சாதகமாக கொண்டு பாகப்பிரிவினை ஏற்படவில்லை என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.